சேலத்தில் அ.தி.மு.க. பகுதிச் செயலாளர் அபு என்கிற மகபூப் அலி தலைமையில் 150-க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

சேலத்தில் அ.தி.மு.க. பகுதிச் செயலாளர் உள்பட

150க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கழகத்தில் இணைந்தனர்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில்!

சேலம், ஜூலை 4-

சேலத்தில் அதிமுக பகுதி செயலாளர் தலைமையில் 100 இஸ்லாமிய பெண்கள் உள்பட 150 க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் அதிமுகவில் இருந்து விலகி சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

இஸ்லாமியர்களின் நலனில் அக்கறை கொண்ட தலைவராக தமிழ்நாடுமுதலமைச்சர் திகழ்ந்து வருவதாக அமைச்சர் ராஜேந்திரன் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றி வரும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை கண்டு மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக சேலம் மாநகர் மாவட்டம் அம்மாபேட்டை பகுதி அதிமுக செயலாளராக பணியாற்றி வந்த அபு என்கிற மகபூப் அலி தலைமையில் அதிமுக சிறுபான்மை பிரிவு மாவட்ட இணை தலைவர் ரியாசுதீன் இணைச் செயலாளர் அப்துல் காதர், அதிமுக தகவல் தொழில்நுட்ப அணி பகுதி செயலாளர் முகமது ஹனிபா உள்ளிட்ட பல்வேறு வார்டு துணை செயலாளர்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் அதிமுகவிலிருந்து விலகி திமுகவில் இணையும் நிகழ்ச்சி சேலம் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் மாளிகையில் இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் கலந்துகொண்டு அதிமுகவிலிருந்து விலகி திமுகவில் இணைந்த அதிமுக பகுதி செயலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் கழக துண்டை அணிவித்து வரவேற்றார்.

மேலும் நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜேந்திரன் பேசும்போது சிறுபான்மையின மக்களுக்கு என்றும் பாதுகாக்கும் இயக்கமாக திமுக திகழ்ந்து வருவதாகவும், இஸ்லாமியர்களுக்கு பாதிப்பு என்று வந்தால் முதல் குரல் கொடுக்கும் தலைவராக தமிழ்நாடுமுதலமைச்சர் உள்ளார் என்று கூறிய அவர், மகளிர்காகவும் மாணவ மாணவியர்களுக்காகவும் இஸ்லாமியர்களுக்காகவும் தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றிய திட்டங்களை பொது மக்களிடையே எடுத்துரைக்கும் பணியில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டு கொண்டார்.

நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், நாசர்கான் சேலம் மாநகர செயலாளர் ரகுபதி பகுதி செயலாளர் இப்ராஹிம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.